**தேசிய சேமிப்பு வங்கி - 2016**

---

தேசிய சேமிப்பு வங்கியினதும் ("வங்கி"), வங்கி மற்றும் அதன் துணைக் கம்பனியினதும் ("தொகுதி") 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி அதிகாரச்சட்டத்தின் 37 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. துணைக் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் குறித்த என்னால் நியமிக்கப்பட்ட பொதுத் தொழிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு இயக்குனர் சபையின் ("சபை") பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம் – வங்கி

தேசிய சேமிப்பு வங்கியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**அபிப்பிராயம் – தொகுதி**

தேசிய சேமிப்பு வங்கியினதும் அதன் துணைக் கம்பனியினதும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல் (எல்கேஎஸ்/எஸ்எல்எவ்ஆர்எஸ்)

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 77.28 மில்லியன் தொகையான கட்டிடங்களின் நிர்மாணம் தொடர்பாக நடைபெற்று வரும் வேலையானது வேறு காணியில் கட்டிடங்களை நிர்மாணிப்பது தொடர்பான முகாமைத்துவ தீர்மானத்தால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்ட 18 அடுக்குமாடி கட்டிட நிர்மாணம் தொடர்பாக ஏற்பட்ட ரூபா 35.23 மில்லியன் தொகையான மூலதன செலவினத்தை உள்ளடக்கியுள்ளது. இருந்த போதிலும், மேற்குறிப்பிட்ட நிர்மாண வேலைகளுக்காக ஏற்படுத்தப்பட்ட கிரயமானது இதனுடைய பயன்பாட்டிலிருந்து எந்தவித எதிர்கால நன்மைகளும் கிடைக்கப்பெறுவது எதிர்பார்க்கபடாமையால் எல்கேஎஸ் 16 இன் பிரகாரம் மீளமதிப்பிடப்பட்டிருந்தது. மேலும், அதற்காக ஏற்படுத்திய கிரயம் பயனற்ற செலவினமாகவிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ரூபா 200,000 செலவிடப்பட்டு 1999 இல் மஹியங்கனையில் கொள்வனவு செய்யப்பட்ட 224 மற்றும் 225 உறுதி இலக்கத்தை கொண்ட 28.14 பேர்ச்சஸ் பரப்பளவுள்ள இரண்டு காணிகளை வங்கியானது சுவீகரித்திருந்தது. எனினும், காணிகளின் பெறுமதி இலவச சொத்துக்களாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை. அந்தக் காணிகளில் அமைந்துள்ள இரண்டு கட்டிடங்கள் ரூபா 1.6 மில்லியனிற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் அத்தகைய காணிகள் மீள்மதிப்பீட்டிற்காக கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பெறவேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டில் வங்கியால் செலுத்தப்பட்ட ரூபா 1,245.899 மில்லியன் கூட்டுத்தொகையான சுவப் (SWAP) கிரயம் கொத்தவால பாதுகாப்பு பல்கலைக்கழகம் மற்றும் பொது திறைசேரியிடமிருந்து பெற வேண்டியவையாக காட்டப்பட்டிருந்தது. இந்த தொகையின் அறவீடு தொடர்பில் ஆவணச்சான்றுகள் இல்லாதிருந்தமையால் 2017 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டிற்காக திறைசேரிக்கு செலுத்தவேண்டியப பங்குலாபத்திலிருந்து இத்தொகையை அறவிடுவதற்கு முகாமைத்துவம் தீர்மானித்திருந்தது.

(ஆ) ரூபா 95.5 மில்லியன் தொகையான மோசடியான காசு மீளப்பெறல்கள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது ரூபா 1.2 மில்லியனால் அல்லது 1.27 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதில், ரூபா 95 மில்லியன் தொகை ஒரு வருட காலத்திற்கு மேலாகவும் ரூபா 8.8 மில்லியன் தொகை ஐந்து வருடங்களுக்கு மேலாகவும் நிலுவையாகவுள்ளது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமல் அவதானிக்கப்பட்ட பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி அதிகாரச்சட்டம் | |
| (i) 47 ஆம் பிரிவு | 10 ஆண்டுகளிற்கு மேலாக செயற்பாடற்றிருந்த வைப்புக்கள் கோரப்படாத வைப்பு ஒதுக்கங்கள் கணக்கிற்கு மாற்றப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் ரூபா 1,282.6 மில்லியன் ஆன அத்தகைய தொகை குறிப்பிட்ட ஒதுக்க கணக்கிற்கு மாற்றப்படாமல் செயற்பாடற்றிருந்ததென அவதானிக்கப்பட்டது. |
| (ii) 47(4) ஆம் பிரிவு | கோரப்படாத வைப்பு ஒதுக்க கணக்கிற்கு மாற்றப்பட்ட வைப்புக்களில் வாடிக்கையாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் வங்கியின் திரட்டு நிதியிலிருந்து திறைசேரியின் செயலாளருக்கு இயலுமான வகையில் செலுத்தப்பட வேண்டும் 2000-2016 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது வங்கியானது ரூபா 1,115.43 மில்லியனை செலுத்தியிருந்த போதும், திறைசேரியின் செயலாளரினால் 2017 ஆகஸ்ட் 31 வரையிலும் மீளவழங்கப்பட்டிருக்கவில்லை |

(ஆ) அரச பெறுகைகள் வழிகாட்டி - 2006

| | | |
|---|---|---|
| (i) | 2.1.2 ஆம் வழிகாட்டல் | கொள்வனவுக் குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக்களின் அனைத்து உறுப்பினர்களும் அதன் முதலாவது கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் பிரகடனமொன்றை கையொப்பமிடுவதற்கு வேண்டப்பட்டுள்ளதுடன் அத்தகைய வெளிப்படுத்தல் ஆகக்குறைந்தது 5 ஆண்டு காலப்பகுதிக்கு பாதுகாக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், பின்வரும் கொள்வனவுகள் தொடர்பில் அத்தகைய பிரகடனமானது சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>• ரூபா 5.33 மில்லியனுக்கு ரீ.சேட்களின் கொள்வனவு<br><br>• ரூபா 50.57 மில்லியனுக்கு தகவல் தொழில்நுட்ப உபகரணங்களின் கொள்வளவு<br><br>• ரூபா 4.65 மில்லியனுக்கு ஏரிம் (ATM) கருவிகளின் கொள்வனவு<br><br>• ரூபா 8.00 மில்லியனுக்கு மோட்டார் சைக்கிள்களின் கொள்வனவு<br><br>• ரூபா 2.58 மில்லியனுக்கு கெக்கிறாவ கிளையின் புனர்நிர்மாணம் |
| (ii) | 5.3.10 ஆம் வழிகாட்டல் | 5 மில்லியனை விட அதிகமானதும் அல்லது 25 மில்லியனை விட குறைவானதுமான பெறுமதியான ஒப்பந்தங்களிற்கான விலைக்கூறு செல்லுபடியாகும் காலப்பகுதி 77 நாட்களாகவிருந்த போதும் வங்கியால் ரூபா 5.33 மில்லியன் கிரயத்திலான ரீ சேட்டுக்களில் கொள்வனவுகளில் 180 நாட்கள் வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) | 5.4.8, 8.12.1 மற்றும் 8.12.13 ஆம் வழிகாட்டிகள் | ரூபா 516,615 பெறுமதியான 11 பழைய தங்க கட்டிகள் அவைகள் அடகுபிடித்தல் நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட முடியாதிருந்தமையால் கிளைகளால் அவை நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும், அவைகளின் பெறுமதி வழங்குனர்களால் வழங்கப்பட்ட செயலாற்றல் முறியிலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. இத்தகைய தங்க கட்டிகள் வங்கியின் தேவைப்பாடுகளுக்கிணங்க இணங்கியுள்ளதா என உரிய பொறுப்புள்ள உத்தியோகத்தர்களால் பரீட்சித்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iv) | ஒப்பந்தத்தின் கடிதத்தின் 5.3.10 ஆம் வழிகாட்டி மற்றும் 10 ஆம் பிரிவு | • ரூபா 2 மில்லியனுக்கு அதிகாமகவுள்ளதும் 5 மில்லியனுக்கு குறைவானதாகவுள்ளதுமான ஒப்பந்த பெறுமதிக்கான செல்லுபடியாகும் காலம் 63 நாட்களாக இருத்தல் வேண்டும். எனினும், ரூபா 2,583,162 பெறுமதியான புத்தாக்க ஒப்பந்தத்திற்காக கெக்கிறாவ கிளையால் 150 நாட்கள் வழங்கப்பட்டிருந்தது.<br><br>• செயலாற்றல் முறியானது அதனது காலாவதி திகதி முடிவடைந்த பின்னர் 6 மாதங்களின் குறை பொறுப்பு கால முடிவின் இறுதி வரை செல்லுபடியாகும். எனினும், இந்த ஒப்பந்தத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட முறியின் செல்லுபடியாகும் காலப்பகுதி 4 மாதங்கள் மாத்திரமேயாகும். |
| (இ) | ஒப்பந்த உடன்படிக்கையின் 33 ஆம் பிரிவு | உடன்பட்ட காலப்பகுதியில் வழங்குனர்கள் பொருட்களை வழங்குவதற்கு தவறியதனால் ஒரு நாளுக்கு 1,000 படி தாமதக்கட்டணம் அறவிடப்பட வேண்டும். இருந்த போதிலும், ரூபா 50.567 மில்லியன் பெறுமதியான கணனி உபகரணத்தினை கொள்வனவு செய்யும் போது அவைகள் வழங்குனர்களால் 28 தொடக்கம் 92 நாட்கள் காலதாமத்துடன் வழங்கியமையால் வழங்குனர்களிடமிருந்து அத்தகைய கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது வங்கியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 13,034 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 13,303 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 269 மில்லியன் முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகின்றது.

மீளாய்வாண்டின் போது வங்கியின் துணைக் கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 253 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 109 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 144 மில்லியன் அல்லது 57 சதவீத வீழ்ச்சியொன்றை சுட்டிக்காட்டுகின்றது. உடன்படிக்கையின் மீதான வட்டி செலவினம் ரூபா 183 மில்லியனால் அல்லது 49 சதவீதத்தால் அதிகரித்தமை நிதிசார் விளைவுகளின் பின்னடைவிற்கு பிரதான காரணமாக பங்களித்திருந்தன.

வங்கியின் பெறுமதிச் சேர்க்கை கூற்றின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டின் பெறுமதிச் சேர்க்கை ரூபா 23,197 மில்லியனாக இருந்ததுடன் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 0.75 சதவீத அதிகரிப்பினை சுட்டிக்காட்டியது.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு**

**(அ) முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்**


கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வங்கியின் சில முக்கியமான விகிதங்கள் துறை விகிதங்களுடன் சேர்த்து கீழே தரப்பட்டுள்ளன.

| | | துறை விகிதங்கள் * | 2016 | 2015 |
|---|---|---|---|---|
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | | | | |
| (i) | சராசரி பங்குதாரர் நிதிகள் மீதான திரும்பல் (ஆர்ஓஈ) (சதவீதம்) | 16.73 | 29.37 | 31.15 |
| (ii) | சராசரி சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) (சதவீதம்) | 2.09 | 1.5 | 1.6 |
| (iii) | தேறிய வட்டி எல்லை | 3.6 | 2.98 | 3.32 |
| (iv) | செயற்பாட்டு செலவினங்களிற்கான பதவியணிக் கிரயம் | 44.91 | 60.28 | 56.75 |
| **மூலதனப் போதுமை** | | | | |
| (i) | மூலதனப் போதுமை – தட்டு I (ஆகக்குறைந்தது 5%) | 13.59 | 12.53 | 17.83 |
| (ii) | மூலதனப் போதுமை – தட்டு II (ஆகக்குறைந்தது 10%) | 15.72 | 14.68 | 16.34 |
| **திரவ விகிதம்** | | | | |
| | திரவச் சொத்து விகிதம் (சதவீதம்) | 34.22 | 72.6 | 81.08 |

* இலங்கை மத்திய வங்கியினால் பிரசுரிக்கப்பட்ட வங்கித்துறைக்கான சராசரி வருடாந்தப் புள்ளிவிபரவியலின் 10 ஆண்டு சராசரி துறை விகிதத்திற்காக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டில் வங்கியின் சராசரிச் சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) மற்றும் தேறிய வட்டி எல்லை என்பன முறையே 0.1 சதவீதம் மற்றும் 0.34 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் அவை 2016 ஆம் ஆண்டிற்கான கைத்தொழில் சராசரியை விடக் குறைவாகக் காணப்பட்டன. 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான வட்டி எல்லையை பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




(ii) 2016 ஆம் ஆண்டில் வங்கியின் வட்டி வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 8,261 மில்லியன் அல்லது 11 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதேநேரம் வட்டி செலவினம் ரூபா 9,777 மில்லியனால் அல்லது 19 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. ஆகையால் மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானத்தில் 8 சதவீத எதிர்மறையான அதிகரிப்பை காட்டுகின்றது. ஆகையால் மீளாய்வாண்டிற்கான தேறிய வட்டி வருமானம் ரூபா 1,516 மில்லியனால் அல்லது 6 சதவீதத்தால் குறைவடைந்தது.

(iii) திரவத்தன்மை விகிதமானது கைத்தொழில் வீதத்துடன் ஒப்பிடும் போது உயர்வாக இருந்தபோதும் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டில் 8.48 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(iv) வங்கியின் மூலதன போதுமை விகிதங்கள் (தட்டு 1 மற்றும் தட்டு 2) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் முறையே 5.3 சதவீதம் மற்றும் 1.66 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அதன் விளைவால், நியம விகிதத்துடன் ஒப்பிடும் போது சாதுவாக பின்னோக்கியிருந்தது.

**(ஆ) இலாபத்தன்மை**

(i) 197 கிளைகள், 11 தபால் கிளைகள், 03 பிரிவுகள் மற்றும் தலைமை அலுவலகம் என்பவற்றின் மீளாய்வாண்டிற்கான வரிக்கு முந்திய தேறிய இலாபம் ரூபா 16,642 மில்லியன் கூட்டுத்தொகைகளாவிருந்த அதேநேரம் 41 கிளைகளுடன் தொடர்பான தேறிய நட்டம் ரூபா 617.79 மில்லியனானதுடன், தபால் கிளையொன்று மற்றும் இரண்டு பிரிவுகள் மீளாய்வாண்டிற்கான ரூபா 13,303 மில்லியன் வங்கியின் வரிக்கு முந்திய தேறிய இலாபத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டிற்கான வங்கியின் ஒட்டுமொத்த வருமானம் ரூபா 87,399 மில்லியன் ஆகவிருந்ததுடன் இது முன்னைய ஆண்டில் ரூபா 79,282 மில்லியனாகவிருந்தது. ஆகையால் ஒட்டுமொத்த வருமானத்தில் ரூபா 8,117 மில்லியன் அல்லது 10.2 சதவீதத்தை காட்டுகின்றது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 வங்கியின் செயலாற்றல்

மட்டுப்படுத்தப்பட்ட வருமானங்களுடைய இலங்கை மக்களிற்கிடையில் சேமிப்புக்களை ஊக்குவித்தல் மற்றும் காசாக்கக்கூடிய வகையில் சேமிப்புக்களை இலாபகரமான முறையில் முதலிடுதல் வங்கியின் பிரதான நோக்கங்களாகவிருந்தன.
கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட நோக்கங்களை செயற்படுத்துகையில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

### (அ) வங்கியின் அடிப்படை


வங்கியியல் துறை மற்றும் உத்தரவாதமளிக்கப்பட்ட விசேட வங்கியியல் துறையுடன் ஒப்பிடும் போது வங்கியின் அதற்கான வைப்புக்கள் (சேமிப்புக்கள்) அடிப்படை மற்றும் சந்தைப்பங்கு கீழே தரப்பட்டுள்ளன.

| | வைப்புக்கள் | | | சந்தைப் பங்கு | |
|---|---|---|---|---|---|
| வருடம் | தேசிய சேமிப்பு வங்கி | வங்கித் துறை | உத்தரவாதமளிக்கப்பட்ட விஷேட வங்கித் துறை | வங்கித் துறையின் சதவீதமாக | உத்தரவாதமளிக்கப்பட்ட வங்கி துறையின் சதவீதமாக |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | | |
| 2016 | 657, 280 | 6,295,559 | 846, 146 | 10.4 | 77.7 |
| 2015 | 595, 776 | 5, 403,131 | 764,155 | 11.0 | 77.9 |
| 2014 | 554, 060 | 4,686,306 | 709,671 | 11.8 | 78.1 |
| 2013 | 501,890 | 4,169,520 | 617,081 | 12.0 | 81.3 |
| 2012 | 457,650 | 3,625,374 | 564,077 | 12.6 | 81.1 |
| 2011 | 411,013 | 3,072,544 | 513,813 | 13.4 | 79.9 |
| 2010 | 355,364 | 2,586,032 | 432,606 | 13.7 | 82.1 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 இலிருந்து 2016 ஆண்டு வரை வங்கித்துறையின் மொத்த வைப்பு தளம் 143 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதும், வங்கியானது அதே காலப்பகுதியின் போது 85 சதவீத வளர்ச்சி வீதத்தை வங்கி அடைந்திருந்தது. அதனால், வங்கியின் சந்தை பங்கு ஏழு ஆண்டுகள் காலப்பகுதியின் போது 13.7 சதவீதத்திலிருந்து 10.4 சதவீதத்துக்கு குறைவடைந்திருந்தது.

(ii) வங்கியின் வைப்புக்களின் தளத்தின் (வருடாந்தம்) வருடாந்த வளர்ச்சியானது வங்கித்துறையின் வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது மிகவும் பின்னோக்கியதாயிருந்தது என காட்டுகின்றது. இது வரைபடத்தில் காட்டுகின்றது.




(iii) வங்கியானது மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் போது குறித்துக் காட்டப்பட்ட அதனுடைய சேமிப்பு வளர்ச்சி வீதங்களை அடைவதற்கு தவறியிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **ஆண்டு** | **இலக்கமிடப்பட்ட வளர்ச்சி விகிதம்**<br>**சதவீதம்** | **உண்மையான வளர்ச்சி விகிதம்**<br>**சதவீதம்** |
|---|---|---|
| 2015/16 | 12 | 10.3 |
| 2014/15 | 12.7 | 7.5 |
| 2013/14 | 12.1 | 10.4 |
| 2012/13 | 13.5 | 9.7 |
| 2011/12 | 14.2 | 11.3 |

**(ஆ) வங்கியின் சந்தைப்பாங்கு அடிப்படையிலான சொத்து**

மீளாய்வாண்டிற்காக முன்னைய ஏழு ஆண்டுகளிற்காக வங்கித்துறை மற்றும் உத்தரவாதமளிக்கப்பட்ட வங்கித்துறையுடன் ஒப்பிடும் போது வங்கியின் சொத்து தளம் கீழே தரப்பட்டுள்ளன.

| **ஆண்டு** | **வங்கித்துறையின் சதவீதமாக** | **உத்தரவாதமளிக்கப்பட்ட விஷேட வங்கித்துறையின் சதவீதமாக** |
|---|---|---|
| 2016 | 10.07 | 75.77 |
| 2015 | 10.50 | 76.39 |
| 2014 | 11.18 | 71.68 |
| 2013 | 11.01 | 71.18 |
| 2012 | 10.00 | 68.64 |
| 2011 | 10.97 | 69.26 |
| 2010 | 11.38 | 70.14 |

அதற்கிணங்க, வங்கித்துறையிலுள்ள வங்கியின் சொத்து அடிப்படை சந்தை பங்கு 2013 இல் 11 சதவீதமாகவிருந்ததுடன், அதற்கு பின்னர் குறைபோக்கினை காட்டுகின்றது. எனினும், வங்கியினால் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் உத்தரவாதமளிக்கப்பட்ட வங்கிகளுக்கிடையில் 75 சதவீதத்திற்கு மேலதிகமான சொத்து அடிப்படையிலான சந்தை பங்கை பராமரிக்க இயலுமானதாகவிருந்தது.

**(இ) சேமிப்பு புள்ளிகளின் தாபிப்பு**

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது வங்கியின் சேமிப்பு புள்ளிகளின் தாபிப்புச் செயலாற்றல் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2016 | 2015 |
|---|---|---|
| கிளைகளின் எண்ணிக்கை | 250 | 245 |
| கணக்கு வைத்திருப்போரின் எண்ணிக்கை (மில்லியன்) | 19.285 | 18.808 |
| தன்னியக்க ரெலர் இயந்திரங்களின் எண்ணிக்கை | 279 | 271 |
| பாடசாலை வங்கிப் பிரிவுகள் | 2,858 | 2,287 |

மீளாய்வாண்டின் போது 05 புதிய கிளைகள் மற்றும் 571 பாடசாலை வங்கி பிரிவுகள் புதிதாக திறக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டில் கணக்கு வைத்திருப்போரின் எண்ணிக்கை ஏறத்தாழ 477,000 ஆல் அதிகரித்திருந்தது. மேலும், சேமிப்பு தொகை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டில் 10.3 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும், மீளாய்வாண்டு காலப்பகுதியின் போது வங்கித்துறை 16.5 சதவீத வளர்ச்சியை கண்டிருந்தது.

## 4.2 செயற்பாட்டு பலவீனங்கள்

**(அ) சர்வதேச பிணைமுறி வழங்கல் - 2013 மற்றும் 2014**

2012 திசெம்பர் 19 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் தொகையான சர்வதேச பிணைமுறிகளை வழங்குவதற்கும் அந்த கடன்களை மீளச்செலுத்தவும் செயற்திட்டங்களிற்கு நிதியிலிடுவதற்காக உரிய கடன்களை வழங்குவதற்கு இயலுமையுள்ள அரச உடமையாக்கப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி பொது முயற்சிகளுக்கு இந்த நிதிகளை கடன் வழங்குவதற்கும் அமைச்சரவை அதன் அங்கீகாரத்தை வழங்கியிருந்தது. அதற்கிணங்க, வங்கியானது வருடாந்தம் 8.875 சதவீதம் மற்றும் 5.15 சதவீத வட்டி வீதத்தில் முறையே 2013 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 750 மில்லியன் மற்றும் 2014 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 250 மில்லியன் பெறுமதியான சர்வதேச பிணைமுறிகளை வழங்கியிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கை அபிவிருத்தி முறிகளில் ஐ.அ.டொலர் 750 மில்லியனில் பிணை பெறுகைகளின் 50 சதவீதத்தை முதலிடுவதற்கும் மிகுதி அரசிற்கு சொந்தமான பொது முயங்சிகளுக்கும் அரசிற்கு சொந்தமான அல்லது கட்டுப்பாட்டிலுள்ள செயற்திட்டங்களுக்கும் ஞாபகக்குறிப்பை வழங்குவதன் பிரகாரம் முறையே ஐ.அ.டொலர் தீர்மானிக்கப்பட்ட கடன்கள் மற்றும் இலங்கை ரூபா கடன்களாக சமமாக வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், முறி பெறுகைகளின் ஐ.ெ.டொலர்கள் 57.91 மில்லியன் 2016 இறுதியிலுள்ளவாறு குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) ஐ.அ.டொலர் 250 மில்லியன் முறி பெறுகைகளின் மொத்த தொகை ஞாபகக்குறிப்பை வழங்குவதன் தேவைப்பாடுகளுடன் இணங்காமல் முறி பெறப்பட்ட திகதியிலிருந்து திறைசேரி முறிகள் மற்றும் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. மூன்று ஆண்டு காலப்பகுதியின் போதும் மீளாய்வாண்டு வரை முறி பெறுகைகளின் முதலீடுகளின் மீதான வருமானம் மற்றும் முறி வழங்குவது சார்பாக ஏற்படுத்தப்பட்ட செலவினம் கீழே தரப்பட்டுள்ளன.

| **ஆண்டு** | **முறியின் பெறுமதி** | **மொத்த வருமானம்** | **சதவீதம்** | **மொத்த செலவினங்கள்** | **சதவீதம்** |
|---|---|---|---|---|---|
| | **ரூபா.** | **ரூபா.** | | **ரூபா.** | |
| 2014 | 32,966,250,000 | 917,907,255 | ***9.32 | 534,033,203 | ***5.42 |
| 20*15 | 36,015,000,000 | 2,962,110,449 | 8.22 | 1,764,281,301 | 4.90 |
| 20**16 | 37,437,500,000 | 3,026,575,503 | 8.08 | 1,890,383,656 | 5.05 |

109 நாட்கள் தொடர்பிலான வட்டி வருமானம்/ செலவினங்கள் செலவினத்தை அடைவதற்காக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டில் 8.22 சதவீதத்திலிருந்து 8.08 சதவீதம் வரை வருமானது குறைவடைந்ததுடன் முறியின் வினைத்திறனான கிரயம் 0.15 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மேலும், தேறிய மிகையானது 3.32 சதவீதத்திலிருந்து 3.03 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

**(ஆ) ஐ.அ.டொலர் 1000 மில்லியன் சர்வதேச முறியின் ஒட்டுமொத்த வருமானம் மற்றும் செலவினம்**

---

வங்கியானது 2016 திசெம்பர் 31 வரை விநியோகித்த முறிகள் தொடர்பில் ரூபா 34,341,748,631 கூட்டுத்தொகையை வட்டி மற்றும் ஏனைய செலவினமாக செலவழித்திருந்த அதேநேரம், பிணை பெறுகைகளை அதே காலப்பகுதியின் போது முதலீடு செய்ததன் மூலம் ரூபா 43,504,850,168 வருமானமொன்றை உழைத்திருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **ஆண்டு** | **நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில்லுள்ளவாறான மொத்த றெுமதி** | **மொத்த வட்டி மற்றும் ஏனைய செலவினம்** | **சதவீதம்** | **மொத்த வட்டி வருமானம்** | **சதவீதம்** |
|---|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | | **ரூபா** | |
| 2013 | 98,250,000,000 | 2,559,549,750 | ***9.06 | 3,153,860,053 | ***11.16 |
| 2014 | 131,865,000,000 | 9,248,552,817 | 7.01 | 13,155,256,934 | 9.98 |
| 2015 | 144,060,000,000 | 10,874,010,110 | 7.55 | 13,818,036,954 | 9.59 |
| 2016 | 149,750,000,000 | 11,659,635,954 | 7.79 | 13,377,696,227 | 8.93 |
| **மொத்தம்** | | **34,341,748,631** | | **43,504,850,168** | |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் முறிகளின் சராசரி செலவினம் 7.79 சதவீதமாகவிருந்தது. மேலும், முறிகளின் மொத்த செலவீனங்களானது முறியின் பெறுமதியுடன் ஒப்பிடும் போது நாணயமாற்று தேய்வினால் 2016 ஆம் ஆண்டில் 0.24 சதவீதத்தால் அதிகரித்தது. மேலும், முறிகளானது 2018 மற்றும் 2019 இல் முதிர்ச்சியடையும் போது டொலர்களை வழங்குவதற்கும் முதலீட்டாளர்களுக்கு மீளச் செலுத்துவதற்கும் வங்கியானது எந்தவொரு முன்னோக்கிய மாற்றுவீத உடன்படிக்கையிலும் கைச்சாத்திட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டில் உழைத்த சராசரி மொத்த வருமானம் 9.59 சதவீதத்திலிருந்து 8.93 சதவீதம் வரை 0.66 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. சராசரி மொத்த வருமானம் 8.93 சதவீதமாகவும் சராசரி மொத்த செலவினத்தின் 7.79 சதவீதமாகவும் இருந்ததால் வங்கியானது 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் 1.14 சதவீத மிகையை உழைக்கமுடிந்தது.

## 4.3 நிர்மாண வேலைகளிலுள்ள காலதாமதங்கள்

நான்கு கிளைகளின் நிர்மாண வேலைகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் (2011 ஆம் ஆண்டில் மூன்று கிளைகள் மற்றும் 2012 ஆம் ஆண்டில் ஒரு கிளை) அத்தகைய கிளைகளின் நிர்மாண வேலைகள் 2016 திசெம்பர் 31 வரை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. அதனால், இத்தகைய கிளைகளை நடாத்துவதற்காக வாடகை அடிப்படை தொடரபான பெறப்பட்ட கட்டிடத்திற்காக ரூபா 11.22 மில்லியன் தொகையான வாடகை செலுத்த வேண்டியிருந்தது.

## 4.4 கடன் நிர்வாகம்

### 4.4.1 செயற்பாடற்ற கடன்கள்

மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு வங்கியினுடைய நிலுவையாகவுள்ள மொத்த கடன் மீதி மற்றும் செயற்பாடற்ற கடன்கள் முறையே ரூபா 280,718 மில்லியன் மற்றும் ரூபா 4,774 மில்லியன் தொகையாகவிருந்ததுடன் இவை முன்னைய ஆண்டில் ரூபா 236,033 மில்லியன் மற்றும் 9,055 மில்லியன் தொகையாகவிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) வங்கியானது மீளாய்வாண்டின் போது ரூபா 280,718 மில்லியன் தொகையான கடன் வசதிகளை வழங்கியிருந்ததுடன் அதில் ரூபா 4,774 மில்லியன் அல்லது 1.70 சதவீதம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாடற்ற கடன்களாகவிருந்தது. மேலும், மொத்த அடகு கடன்களில் ரூபா 2,348 மில்லியன் அல்லது 12.37 சதவீதம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாடற்றதாக அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை காணி மீள்குடியேற்றல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தினூடாக (எஸ்எல்ஆர்டிசீ) ஹேங் கங்ஹா ஸ்ரோம் நீர் வடிகாலமைப்பு செயற்திட்டத்திற்கு நிதி உதவி.

2013 யூன் 26 இல் நடைபெற்ற சபை கூட்டத்தில் மேற்குறிப்பிடப்பட்ட செயற்திட்டத்திற்காக ரூபா 14,227 மில்லியன் கடன்வசதிக்காக இயக்குனர் சபையின் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மேலும், 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளினால் வட்டிக் கொடுப்பனவுகளை வேறுபடுத்துவதற்காக சபை அனுமதியை வழங்கியிருந்ததுடன் அரையாண்டு அடிப்படையில் மூலதனமாக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, ரூபா 2,550 மில்லியன் தொகையான கடன் 2014 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவையாகவுள்ள தொகையானது மொத்த மீளளிப்பு ரூபா 2,550 மில்லியனையும் ரூபா 248 மில்லியன் தொகையான மூலதனமாக்கப்பட்ட வட்டியையும் உள்ளடக்கி ரூபா 2,798 மில்லியனாகவிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட கடன்வசதி ரூபா 14,227 மில்லியனாகவிருந்த போது இது சபையால் ரூபா 11,050 மில்லியனிற்கு குறைக்கப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் மூலதன மீள்கொடுப்பனவுகள் 2016 ஒக்தோபர் 24 இலிருந்து ஆரம்பிப்பதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததுடன் தவணைக்கட்டணம் ரூபா 592.72 மில்லியன் ஆகும். எனினும், மூலதன மீள்கொடுப்பனவு கருணையளித்தல் காலப்பகுதி வங்கியால் 2018 ஏப்ரல் 23 இற்கு நீடிக்கப்பட்டிருந்தது.

ii.. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் 4 சதவீத வட்டி பதிவழிக்க வேண்டியிருந்ததுடன் 2017 மார்ச் 03 ஆந் திகதிய கடிதத்தினால் வேண்டப்பட்ட எஸ்எல்ஆர்டிஎஸ் அத்தகைய ரூபா 4,252,462 வட்டியை விட்டுக்கொடுப்பதற்கு வேண்டியிருந்தது. எனினும், வங்கியானது இந்த கடிதத்திற்கு 2017 யூலை வரை பதிலளித்திருக்கவில்லை.

### 4.4.2 செயற்பாடற்ற கடன்களின் வயதுப் பகுப்பாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த செயற்பாடற்ற கடன்கள் ரூபா 4,774.43 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 313.81 மில்லியன் அல்லது 6.57 சதவீதம் 3 வருடங்களுக்கு மேலாக நிலுவையாகவிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில்லுள்ளவாறான 05 வருடங்களுக்கு மேலாகவுள்ள செயற்பாடற்ற கடன்கள் ரூபா 115.38 மில்லியனாகவிருந்ததுடன் அதில் 88.15 மில்லியன் அல்லது 76.4 சதவீதம் வீடமைப்பு கடன்களை பிரதிநித்துவப்படுத்தியது.

(இ) ரூபா 7.81 மில்லியன் ''றட்ட இதுறல கடன்களின்'' செயற்பாடற்ற கடன் மீதிகளில் ரூபா 4.13 மில்லியன் தொகை மாத்திரம் அல்லது 53 சதவீதம் 5 வருடங்களுக்கு மேலாக நிலுவையாகவிருந்தது.

(ஈ) வீடமைப்பு கடன்களின் செயற்பாடற்ற மீதிகள், உத்தரவாதங்கள் மீது வழங்கப்பட்ட அரச மற்றும் தனிப்பட்ட கடன்களினது 2016 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு முறையே 21 சதவீதம், 8 சதவீதம் மற்றும் 17 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்தியது.

(உ) நிலுவையாகவுள்ள அடகு முற்பணங்களின் மீதிகள் ரூபா 2,348.43 மில்லியனானதுடன் இது 49 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்துகின்றது. மேலும், செயற்பாடற்ற அடகு முற்பணங்களின் 95 சதவீதத்திற்கு மேல் ஒரு வருடம் தொடக்கம் மூன்று வருடங்களிற்கு நிலுவையாகவிருந்தது.

(ஊ) 6 கிளைகளின் செயற்பாடற்ற அடகு முற்பணங்கள் (என்பிர) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுக்கப்பட்ட மொத்த அடகு முற்பணங்களின் 40 சதவீதத்தை விட அதிகமாகவிருந்தது. விபரங்கள் பின்வருமாறுள்ளன.

| **கிளை** | **மொத்த அடகு முற்பணங்கள்**<br>**ரூபா** | **மொத்த செயற்பாடற்ற முற்பணங்கள்**<br>**ரூபா** | **மொத்த முற்பணங்களின் சதவீதமாக செயற்பாடற்ற முற்பணங்கள்** |
|---|---|---|---|
| கெகிறாவ | 92,976,504 | 42,136,045 | 45 |
| மன்னார் | 68,086,128 | 27,882,329 | 41 |
| தலவாகெல | 70,574,540 | 33,182,521 | 47 |
| வத்தல | 137,425,646 | 66,014,173 | 48 |
| பூண்டுலோயா | 15,976,402 | 7,891,114 | 49 |
| பொத்துவில் | 6,306,664 | 4,143,417 | 78 |

**4.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

வங்கிக்குரிய காணிகளின் சட்ட உரிமையாண்மையை பெற்றுக்கொள்ளாமல் எட்டு காணிகளிலுள்ள கட்டிடங்களின் நிர்மாணத்திற்காக ரூபா 83.6 மில்லியன் தொகையை வங்கி ஏற்படுத்தப்பட்டிருந்தது.

**4.6 மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

2016 இன் இறுதியில்லுள்ளவாறு வங்கியின் மோசடித் தன்மையிலான கொடுக்கவ் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி ரூபா 95,524,914 தொகையானதுடன் அதில் 26 சந்தர்ப்பங்களில் ரூபா 47,299,260 தொகையில் வங்கியின் அலுவர்கள் நேரடியாக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மேலும், அடகு பிணைகளை பெறுவதன் மூலம் அடகு கடன்களை கொடுப்பதில் ரூபா 18,914,481 அல்லது 20 சதவீதம் தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. தன்னியக்க ரெல்லர் கருவிகளினூடாக மேற்கொள்ளப்பட்ட மோசடித் தன்மையான மீளப்பெறல் தொடர்பான தொகை ரூபா 42,984,600 ஆக இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

**4.7 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**(அ) வங்கியின் பதவியணி நிலைமை**

(i) மீளாய்வாண்டிற்கான வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 4,846 ஆனதுடன் 2016 இறுதியளவில் 3,286 நிரந்தர பதவியணிகளையும் 1,098 ஒப்பந்த அடிப்படையிலான பதவியனியையும் உள்ளடக்கி 4,384 ஊழியர்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். அதற்கிணங்க, 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 132 மிகையான பதவியணிகளுடன் 594 வெற்றிடங்களுமிருந்தது.

(ii) வெற்றிடங்களின் 260 அல்லது 31 சதவீதம் நிறைவேற்று தரத்திலிருக்கின்றதுடன் அத்தகைய பதவிகள் 2016 இறுதியளவிலும் நிரப்பப்படாமையிலிருந்தது. பத்து உதவி பொது முகாமையாளர்கள், 23 பிரதம முகாமையாளர்கள், 3 சிரேஷ்ட முகாமையாளர்கள் மற்றும் 183 உதவி முகாமையாளர்கள் மேற்குறிப்பிடப்பட்ட வெற்றிட பதவிகளில் உள்ளடக்கப்பட்டிருந்தனர். இது வங்கியின் சுமூகமான செயற்பாடுகளை பாதகமாக பாதித்திருந்தது.

(iii) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி நிலைமைகளில் 2,221 பதவிகள் அல்லது உள்ளபடியான பதவியணியின் 51 சதவீதம் உதவி உத்தியோகத்தர் பதவியினை பிரதிநித்துவப்படுத்தியது. வங்கியானது போட்டிப் பரீட்சையை நடாத்தாமல் நேர்முக பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு 25 வயதிற்கு குறைவாகவுள்ள உதவி உத்தியோகத்தர்களை வேலைக்கமர்த்த தீர்மானித்ததுடன் ஏனைய பொது வங்கித்துறைகளால் அதே முறைகள் பின்பற்றப்பட்டது.

(iv) பொருத்தமான பரீட்சார்த்திகளால் விண்ணப்பிப்பதற்காக எந்த பொது அறிவிப்பினையும் வழங்காமல் முகாமைத்துவமான அவர்களுடைய சொந்த விருப்ப பட்டியல்களை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பதாரிகளை நேர்முகப்பரீட்சைக்கு அழைத்திருந்தார்.

(v) 2016 பெப்ரவரியிலிருந்து செயற்பாட்டிற்கு வரும் வகையில் இருபத்தியொரு உதவி உத்தியோகத்தர்கள் வயது எல்லைகளை 30 வருடங்கள் வரை அதிகரிப்பதன் மூலம் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். மேலும், தகைமையைக் பெறுவதற்கு பெறவேண்டிய 40 புள்ளிகள் 36 வரை குறைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, உரிய தகுந்த காரணமில்லாமல் 2016 யூலை இல் 99 உதவி உத்தியோகத்தர்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

**(ஆ) ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(i) பதுளை கிளையில் மோசடியில் ஈடுபட்ட ஊழியரிடமிருந்து ரூபா 8,883,042 காசு மோசடி காசை அறவிடுவதற்கு தீர்மானித்திருந்த போதிலும், ரூபா 2.5 மில்லியன் மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருந்தது. அந்த நபர் அத்தகைய மீது அறவீடு தொடர்பில் அறிவுறுத்தப்பட்டிருந்ததுடன் அந்த தொகை 2017 யூன் 30 வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 2009 இல் புதிதாக வேலைக்கமர்த்தப்பட்ட போக்குவரத்து முகாமையாளருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று விசாரணை 2017 சனவரி அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க, அத்தகைய உத்தியோகத்தரை எச்சரிப்பதற்கு தீர்மானித்திருந்தது. எனினும், அவரை போக்குவரத்து முகாமையாளர் நிரந்தர பதவிக்கு வேலைக்கமர்த்துவதற்கு 2017 ஆகஸ்ட் இறுதி வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், சொத்துக்களின் முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் இடங்களிலுள்ள கிளைகள் போன்ற ஐந்து பிரிவுகள் தொடர்பாக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பதினேழு இலக்குகள் கவனமெடுத்தல் காலப்பகுதியின் போது கீழ் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயல்நடவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம், தபால் வங்கித் துறைக்கு கொடுக்கப்பட்ட ஐந்து சேமிப்பு இலக்குகள் 58 சதவீதத்தை விட குறைவாக அடையப்பட்டிருந்தது.

**5.2 உள்ளக கணக்காய்வு**

உள்ளக கணக்காய்வு பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 73 ஆகவிருந்ததுடன் உள்ளபடியாக பதவியணி 2016 ஆம் ஆண்டிற்காக 52 ஆகவிருந்தது. அதற்கிணங்க, 30 வெற்றிட பதவி மற்றும் 09 மிகையான பதவிகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரிவின் பதவியணியிலிருந்தது. பிரதம பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு) மற்றும் உதவி பொது முகாமையாளர் பதவியொருவர் மேற்குறிப்பிடப்பட்ட வெற்றிட பதவி நிலைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தனர். தரம் III-I தரத்திலுள்ள 10 முகாமையாளர் பதவிகள் (கணக்காய்வு) மற்றும் தரம் III-II இலுள்ள 05 உதவி முகாமையாளர் பதவிகள் (கணக்காய்வு) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாகவிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 01 மொழிபெயர்ப்பாளர் (ஆங்கிலம்) பதவி உள்ளடக்கப்பட்டிருந்த போதும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரிவின் உள்ளபடியான பதவியணியில் எவரும் வேலைக்கமர்த்தப்பட்டிருக்காததுடன் இது பிரிவின் மொழிபெயர்ப்பு வேலைகளில் தாமதத்தை ஏற்படுத்தியிருந்தது. மேலும், உதவி பொது முகாமையாளர் (கணக்காய்வு) 2017 மார்ச் இலிருந்து பிரதம பொது முகாமையாளர் பதவிக்கு பதிற்கடமை அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள புறைபாடுகள் வங்கியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| சேமிப்புக்களை ஊக்குவித்தல் | வங்கியின் நோக்கம் சேமிப்புக்களை ஊக்குவித்தலாக இருந்த போதிலும் வங்கித்துறையின் முன்னேற்றத்துடன் உப்பிடும் போது சேமிப்புக்களின் வருடாந்த முன்னேற்றம் ஆகக்குறைந்ததாக குறிக்கப்பட்டிருந்தது. |
| சந்தை பங்கின் பராமரிப்பு | வங்கியினது சந்தைப் பங்கானது தொடர்ச்சியாக குறைவடைவதால் அதனை பராமரிப்பதற்கும் முன்னேற்றுவதற்கும் திட்டமொன்றை வைத்திருக்க வேண்டும். |
| முறி பெறுகைகளின் பயன்பாடு | 2014 இலிருந்து குறிப்பை வழங்குவதன் பிரகாரம் உட்கட்டமைப்பு செயற்திட்டங்களுக்கு வசதியளிப்பதற்காக பெறப்பட்ட ஐ.அ.டொலர் 250 மில்லியன் பெறுமதியின் முறிகளை வழங்குவதிலிருந்து பெறப்பட்ட முழுப்பணத்தையும் வங்கி பயன்படுத்தியிருக்கவில்லை. |